# இன்றைய இறைவார்த்தை

# டிசம்பர் 26

**புனித ஸ்தேவான் – முதல் மறைச்சாட்சி – திருவிழா**

**முதல் வாசகம்:**

இதோ, வானம் திறந்திருப்பதைக் காண்கிறேன்.

**திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம். 6 : 8 – 10, 7 : 54 – 60**

அந்நாள்களில் ஸ்தேவான் அருளும் வல்லமையும் நிறைந்தவராய் மக்களிடையே பெரும் அருஞ்செயல்களையும் அரும் அடையாளங்களையும் செய்து வந்தார். அப்பொழுது உரிமை அடைந்தோர் எனப்படுவோரின் தொழுகைக் கூடத்தைச் சேர்ந்த சிலரும் சிரேன், அலக்சாந்திரியா நகரினரும் சிலிசியா, ஆசியா மாநிலத்தவரும் ஸ்தேவானோடு வாதாடத் தொடங்கினர். ஆனால் அவரது ஞானத்தையும் தூய ஆவி வாயிலாக அவர் பேசிய வார்த்தைகளையும் எதிர்த்து நிற்க அவர்களால் இயலவில்லை. இவற்றைக் கேட்டவர்கள் உள்ளம் கொதித்தெழுந்து, அவரைப் பார்த்துப் பற்களை நறநறவெனக் கடித்தார்கள். அவரோ தூய ஆவியின் வல்லமையை நிறைவாய்ப் பெற்று, வானத்தை உற்று நோக்கினார். அப்போது கடவுளின் மாட்சியையும் அவர் வலப்பக்கத்தில் இயேசு நிற்பதையும் கண்டு, “இதோ, வானம் திறந்து இருப்பதையும், மானிட மகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன்” என்று கூறினார்.

ஆனால் அவர்கள் தங்கள் செவிகளை அடைத்துக் கொண்டு, பெருங்கூச்சலிட்டு, ஒருமிக்க அவர் மேல் பாய்ந்தார்கள். நகரத்திற்கு வெளியே இழுத்துக் கொண்டுபோய் அவர்மேல் கல் எறிந்தார்கள். சாட்சிகள் தங்கள் மேலுடைகளைச் சவுல் எனும் இளைஞரிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் ஸ்தேவான் மீது கல் எறிந்தபோது அவர், “ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்” என்று வேண்டிக் கொண்டார். பின்பு முழந்தாள்படியிட்டு உரத்த குரலில், “ஆண்டவரே, இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்” என்று சொல்லி உயிர்விட்டார்.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவா உமக்கு நன்றி.

**பதிலுரைப் பாடல்**
**திருப்பாடல்கள் 31 : 2 – 3, 5, 7, 15 – 16 (பல்லவி: 5a)**
**பல்லவி: ஆண்டவரே, உமது கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்.**

1. எனக்கு அடைக்கலம் தரும் கற்பாறையாய் இரும். என்னைப் பாதுகாக்கும் வலிமைமிகு கோட்டையாய் இரும். ஆம், என் கற்பாறையும் கோட்டையும் நீரே. உமது பெயரின் பொருட்டு எனக்கு வழிகாட்டி என்னை நடத்தியருளும். பல்லவி
2. உமது கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன். வாக்குப் பிறழாத இறைவனாகிய ஆண்டவரே, நீர் என்னை மீட்டருளுவீர். உமது பேரன்பில் நான் களிகூர்வேன். அக்களிப்பேன். என் துன்பத்தை நீர் பார்த்திருக்கின்றீர். பல்லவி
3. என் எதிரிகளின் கையினின்றும் என்னைத் துன்புறுத்துவோரின் கையினின்றும் என்னை விடுவித்தருளும். உமது முகத்தின் ஒளி அடியேன் மீது வீசும்படி செய்யும் உமது பேரன்பால் என்னை விடுவித்தருளும். பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி (திருப்பாடல்கள் 118 : 26, 27)**
அல்லேலூயா, அல்லேலூயா!
ஆண்டவரின் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்!
ஆண்டவரே இறைவன் அவர் நம்மீது ஒளிர்ந்துள்ளார்.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்**

ஆளுநர்களிடமும் அரசர்களிடமும் யூதர்கள் முன்னும் பிற இனத்தவர் முன்னும் சான்று பகர்வீர்கள்.

**தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 10 : 17 – 22**

அக்காலத்தில் இயேசு தம் திருத்தூதர்களுக்குக் கூறியது: "எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் மனிதர்கள் உங்களை யூதச் சங்கங்களிடம் ஒப்புவிப்பார்கள். தங்கள் தொழுகைக் கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள். என் பொருட்டு ஆளுநர்களிடமும் அரசர்களிடமும் உங்களை இழுத்துச் செல்வார்கள். இவ்வாறு யூதர்கள் முன்னும் பிற இனத்தவர் முன்னும் சான்று

பகர்வீர்கள். இப்படி அவர்கள் உங்களை ஒப்புவிக்கும்பொழுது, “என்ன பேசுவது, எப்படிப் பேசுவது” என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல. மாறாக, உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார்.

சகோதரர் சகோதரிகள் தம் உடன் சகோதரர் சகோதரிகளையும், தந்தையர் பிள்ளைகளையும் கொல்வதற்கென ஒப்புவிப்பார்கள். பிள்ளைகள் பெற்றோர்க்கு எதிராக எழுந்து அவர்களைக் கொல்வார்கள். என் பெயரின் பொருட்டு உங்களை எல்லாரும் வெறுப்பர். இறுதி வரை மன உறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர்.”

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

**சிந்தனை:**

ஒரு இறை பணியாளர் ஒரு பங்கில் பணியில் வெறுக்கப்படுகிறார் என்றால் அது ஒன்றும் ஆச்சரியப்படக்கூடிய செய்தி அல்ல. ஒரு இடத்தில் திருச்சபை சில நெருக்கடிகளைச் சந்திக்கிறது என்றால் அதற்காக வருத்தப்பட அவசியம் இல்லை. திருத்தந்தையின் பேச்சு, அறிக்கை அதிர்ச்சியை உண்டாக்குகிறது என்றால் கவலைப்பட தேவை இல்லை. துன்பமும் வேதனையும் இறைபணியோடு இணைந்தது. ஓநாய்களிடையே ஆடுகள் பணியாற்றுவது போன்றது. இயேசுவுக்காக, நற்செய்திக்காக, அதன் மதிப்பீடுகளுக்காக சான்று பகரும்போது, இத்தகைய இடைஞ்சல்கள் கட்டாயம் வரும் என்பது இயேசு முன்னறிவித்ததே. இதை அறிந்தே, தன் பணியாளர்களுக்கு முன்னெச்சரிக்கை கொடுக்கிறார். நம்பிக்கையும் ஆறுதலும் கொடுக்கும் செய்தியையும் சொல்லுகிறார். பணியின் போது பணியாளரில் செயல்படுவது இயேசுவே. பணியாளர் அல்ல. திருச்சபை அல்ல. திருத்தந்தை அல்ல. “பேசுவது நீங்கள் அல்ல. மாறாக. உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார்.”

“என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவை எல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். இவ்வாறே உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்களையும் அவர்கள் துன்புறுத்தினார்கள்.” (மத்தேயு 5 : 11 – 12)

**********